# Achaarya Vruksham

Monthly E Magazine of Srimath Andavan asramam, Covai




## Special Supplement on Swamy Nigamaantha Mahadesikan 2025

**With the blessings & Anugraham of HH Sri Varahamahadesikan**



**Srimathey Varahamahadesikaya nama:**

**Thiruvaheendrapuram** **Nellore**






**srimān veñkaṭa-nāthārya kavitārkika keśarī**

**vedāntācārya-varyome sannidhattaṁ sadā hṛdī**




After composing the magnum opus Sri bAshyam, Sarasvati devi conferred the title Sri bAshyakArar and told that this vyAkkyAnam will please the sutrakArar itself (veda vyAsa), the accolade which no other bAshyakArAs got except Sri rAmAnuja and gave the Hayagreeva murthy, which was given by BrahmA to Sarasvati devi.

That Hayagreeva divyamangala vigraham post Ramanuja's period came to Swami Desikan. In fact Hayagreevan chose to get the ArAdhanam from Swami Desikan. Thus Lakshmi Hayagreevan, to whom BhasyakArar did ArAdhanam chose Desikan and not any other AchAryAs post rAmAnujA's period.




## KAAVYA GRANTHAS written by Swamy

1. SUBHASHITHAANIVI
2. YAADHAVAABHYUDHAYAM
3. PAADUKAA SAHASRAM
4. HAMSA SANDHESAM
5. Samasya Sahasri (Luptham-Lost)



ANUSHTAANA GRANTHAS by Swamy

1. Bhagavad Aaraadhana Vidhi
2. Yagnopaveetha Prathishta
3. Hari Dina Tilakam
4. Vaishnava Dinasari




## VYAAKHYAANA GRANTHAS ( Commentaries) -10

| | |
|---|---|
| 1. Sarvaartha Siddhi<br>2. Tattva Teekha<br>3. Chatus Slokee Bhashya<br>4. Stotra Ratna Bashya<br>5. Gitaartha Sangraha Raksha | 6. Taatparya Chandrika<br>7. Isaavaasyopanishad<br>8. Vedaartha Sangraha (Luptam-Lost)<br>9. Rahasya Raksha (aka) Gadhya Thraya Bashya)<br>10. Adhikarana Darpanam |



Appaya Dikshitar, the great medieval-era scholar of Advaita Vedanta appreciated Swami Desika by composing a verse in Sanskrit:
evam vichintyas sarvatra bhavaah santi pade padhe kavi tarkika simhasya kavyeshu laliteshvapi

"Even in the simple and soft compositions of this lion of poetry and lion of logic, there is poetic excellence evident at every step he took, and indeed in every word he wrote."



ஓம் வேங்கடேச க்ருபாலப்த அனந்தார்ய ஸ்வப்ன
சிந்திதாய நம:



**Desika Sabha Mumbai**


EMBERUMANAAR DARISHANAM



# Contributors to this special Issue



U.Ve.Uzhapakkam  Devanathachariar



U.Ve.Anantha Padmanabha swamy





U.Ve.J.Satagopan,      Smt.Amrithavalli Satagopan





U.Ve.G.Krishnakumar Poona      Kothailakshmi Hosur

(Others photos not published as they were NA)

# ஆசார்ய வ்ருக்ஷம்

## ஸ்வாமி தேசிகனின் சிறப்பிதழ் 2025

## பொருளடக்கம்- தமிழ் வ்யாசங்கள்


| | பக்கம் எண் |
|---|---|
| கவிதார்க்கிகஸிம்ஹமும் ராகவஸிம்ஹமும் ஶ்ரீ உ.வே.உஷ: பாக்கம் தேவநாதன் | 1 |
| தேசிகநிதி தரும் சேமநிதி --ஜெ. சடகோபன், வில்லிவாக்கம் | 5 |
| திருவேங்கடமுடையான் அவதாரம் - ஶ்ரீ.உ.வே.வித்வான் ஈச்சம்பாடி. ரங்கநாதார்ய மஹாதேசிகன்) | 9 |
| திருச்சின்ன மாலை | 10 |
| பிறவிப்பயனடைய வழிகோலும் தேசிகர்- கஸ்தூரிரெங்கன் | 11 |
| சித்திர முயற்சி: க்ருஷ்ணகுமார தாத தாஸன் | 13 |
| ராமானுஜ தயா பாத்ரம் தேசிகனின் வைபவத்தின் வைபவம்- ஶ்ரீ உ.வே அனந்த பத்மநாபாசாரியார் | 14 |
| ஶ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை | 25 |
| ஶ்ரீதேவநாதன் ஶ்ரீதேஸிகனை வழி மறித்து பெருமை பெறுதல் | 26 |
| ஶ்ரீதேஸிகனிடத்தில் ப்ரபத்தி | 27 |
| ஶ்ரீதேஸிகன் கருடமந்த்ரத்தை ஜபிக்க | 29 |
| ஸ்வாமி தேசிகன் தமிழ் பிரபந்தம் திருச்சின்ன மாலை – புதிர் | 30 |
| ஶ்ரீராமாவதாதாரமும் ஶ்ரீதேசிகாவதாரமும் | 32 |
| ஸ்வாமி தேஸிகன் –அவதாரவைலக்ஷண்யங்கள் | 33 |
| அதிகார ஸங்க்ரஹம் புதிர்- க்ருஷ்ணகுமார தாத தாஸன், | 34 |
| ஸ்வாமி தேஶிகனும், திவ்ய தேசங்களும்- -அமிர்தவல்லி சடகோபன் | 36 |
| திரு நக்ஷத்திர சிறப்புப் புதிர் ---- கோதை லக்ஷ்மி ஶ்ரீநிவாஸன், ஓசூர் | 40 |

# SS on Swamy Desikan
# Contents- English

**Title** **Page No.**


**A true Vaishnava by Sri T. Ramaswami** **44**

**Experiencing Swamy Desika -- Praveena nAmni Ramanuja dasi** **46**

**Swami Desikan and Bhagavat Ramanujar-Aasuri Lakshmi Narasimhan** **48**

**Swami Desikan's Life Chronicles – A Perspective for Modern Life-**
**Lavanya Badrinarayanan.** **56**




ஸ்வாமி தேசிகர் - தூப்புல்

# கவிதார்க்கிகஸிம்ஹமும் ராகவஸிம்ஹமும்

உ.வே.உ.ஷ:பாக்கம் தேவநாதன்

*ஸ்வாமி தேஶிகன் தமது ஸுபாஷிதநீவீ என்ற க்ரந்தத்தை 12 பத்ததிகளில் ஒவ்வொரு பத்ததியிலும் 12 ஶ்லோகங்கள் எனும் முறையில் 144 ஶ்லோகங்களால் அனுக்ரஹித்தார். இவ்விஷயத்தை ஸ்வாமியே*

**सैषा सुभाषितानां माला महनीयवर्णवृत्तगुणा।**
**भावुकसङ्ख्यारूढा प्रियपद्धति भूषिता जयति।।**

*என்ற கடைசி ஶ்லோகத்தின் உத்தரார்தத்தில் 'பாவுக' மற்றும் 'பிரிய' எனும் பதங்கள் கடபயாதி ஸங்க்க்யா முறையில் அணுகப்படின் தெளிவு பெறும் என்று ஸூசிப்பித்தார். இந்த 12 பத்ததிகளில் முதல் ஐந்தும் த்யாஜ்யமாய் விலக்க வேண்டிய குணங்களைக் கொண்டோரின் துஷ்டத் தன்மைகளை விளக்கும் ஶ்லோகங்களைக் கொண்டதாகவும் அடுத்த ஏழு பத்ததிகளும் நல்லோரின் கொண்டாடத்தக்க குணங்களைப் பறைசாற்றும் ஶ்லோகங்களைக் கொண்டும் ஒளிர்கின்றன.*

*இவற்றுள் முதல் பத்ததி அநிபுணபத்ததி. அதாவது அறிவிலியைப் பற்றி ப்ரஸ்தாபிக்கிறது. இந்த பத்ததியின் கடைசி ஶ்லோகம் இவ்வாறு அமைந்துள்ளது*

**निरवधिगुणग्रामे रामे निरागसि वागसि-**
**स्फुरणमुषितालोका लोका वदन्ति सदन्तिके।**
**वरतनुहतिं वालिद्रोहं मनागपसर्पणं**
**परिमितगुणे स्पष्टावद्ये मुदा किमुदासते।।**

*"எண்ணிலடங்கா குணக்கூட்டத்தைக் கொண்டவனும், சிறுதோஷம் கூடக் கைவரப் பெறாதவனுமான ராமனையே, ஸ்த்ரீவதம் செய்தவன், வாலியை மறைந்திருந்து அடித்தவன், கரதூஷணாதியருடனான யுத்தத்தில் பிறகாலிட்டவன் என்ற தோஷங்களை, நல்லோரிடத்திலேயே, தம் சொற்கத்திவீச்சினால் கண்பார்வை மங்கிக் குருடானோர் சொல்வராகில், அவர்கள், குறைந்த குணங்களுடையோரும் ஸ்பஷ்டமாய் தவறுடையோருமான நம் போன்றோரிடத்தில் வெறுமனே மகிழ்ந்திருப்பரோ?"*

*இந்த ஶ்லோகம் அமைந்த பாங்கு ரொம்பவும் போக்யமாய் உள்ளது. மனத்துக்கினியானும், தோஷங்களுக்குத் தொடர்பே இல்லாதவனுமான ராமனையே துஷ்டர் நிந்திப்பராகில், ப்ரதிக்ஷணம் புதுசு புதுசாயும், தினுசு தினுசாயும், லஜ்ஜையும் பயமுமற்று தோஷம் செய்வதையே*

*வாடிக்கையாகக் கொண்டோருமான நம்மை இரக்கத்துடன் நிந்தியாது ஒழிவரோ?*

*ராமனிடம் உள்ள குணங்கள் "குணக்ராமங்கள்"- நற்குணக் குவியல்கள், அவையும் கூட "நிரவதிகள்" - முடிவற்றவை, எண்ணிலடங்காதவை.*

*இத்தகைய ராமகுணங்களை வால்மீகி கூறும் பாங்கே தனி*
**दान्तैः सर्वप्रजाकान्तैः प्रीतिसञ्जननैर्नृणाम्।**
**गुणैर्विरुरुचे रामः दीप्तः सूर्य इवाम्शुभिः।।** *என்றும்*
**बहवो नृप कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते।** *என்றும்*
**राघवं शोभयन्त्येते षड्गुणाः पुरुषोत्तमम्।** *என்றும்*
**धातूनामिव शैलेन्द्रो गुणानामाकरो महान्।** *என்றும்*
**तमेवं गुणसंपन्नमप्रधृष्यपराक्रमम्।** *என்றும்*
**ज्येष्ठं श्रेष्ठगुणैर्युक्तं** *என்றும்*
*இன்னும் பல ஶ்லோகங்களாலும் ஸங்க்ரஹித்தார் ஆதிகவி.*

*"இன்று போய் நாளை வா" என்பதை வால்மீகி* **गच्छानुजानामि रणार्दितस्त्वं** *என்றார். இத்தை மனத்தில் நிறுத்தி ஆழ்வான் தமது அதிமானுஷஸ்தவத்தில் 'இது என்ன குணம்? எப்படி இதை வர்ணிப்பது? என்னவெனக் கூறுவது? என்று அலமர்ந்து போகிறார்.*
**यत्तादृशागसमरिं रघुवीर वीक्ष्य विश्रम्यतामिति मुमोचिथ मुग्धमाजौ।**
**कोऽयं गुणः कतरकोटिगतः कियान्वा कस्य स्तुतेःपदमहो बत कस्य भूमिः?**
*என்ற ஶ்லோகத்தில்.*
*ராமனிடம் இன்னின்ன கல்யாணகுணங்கள் உள்ளன என்பதை* **कोन्वस्मिन् सांप्रतं लोके** *முதலாய ஸ்லோகங்களிலும், அதற்கான பதிலாய் அமைந்த நாரத வாக்யங்களாலும், சூர்பணகாமாரீச மந்தோதர்யாதிகளின் வாக்யங்களாலும் ஸ்பஷ்டமாய் அறிகிறோம். இவையனைத்தையும் சுருக்கி* **निरवधिगुणग्रामे** *என்கிறார் ஸ்வாமி. நிராகஸி-தோஷமற்றவன் என்றும் உடனேயே ஸாதித்திருப்பதினால் ஶ்ரீராமனுடைய உபயலிங்கயுக்தத்வம் சொல்லப்பட்டதாயிற்று. இதற்கு*

**न तं पश्याम्यहं लोके परोक्षमपि यो नरः।**
**स्वमित्रोऽपि निरस्तोऽपि योऽस्य दोषमुदीरयेत्।।**

*என்ற வால்மீகிஶ்லோகம் ப்ரமாணமாகிறது.*

இப்படி பாரம்யம் கொண்டு ஸகலலோக ப்ரியனாய், ஶத்ருவினாலேயே கொண்டாடப்படுபவனாய், ஒருவராலும் ஒதுக்கி விடமாட்டாத குணகண பரிபூர்ணனாய் விளங்கும் ராமனையே, தோஷம் சொல்லக் காத்திருக்கிறது ஒரு கூட்டம். ஏனெனில் அது நற்பார்வை இழந்த கூட்டம்.

सर्वस्य लोचनं शास्त्रं यस्य नास्त्यन्ध एव सः।

என்ற கணக்கில் ஶாஸ்த்ரமாம் கண்ணற்றது, தவறுகளை மட்டும் காண்பது, அதுவும் பிறரிடம் மாத்திரமே. தன்னிடத்திலோ, இருக்கும் தோஷங்களையும் காணாதே, இல்லாத குணங்களையும் ஏறிட்டுக் கொள்ளும் திருட்டுக் குருடர் கூட்டம் அது. அதன் பார்வை பறி போனதற்குக் காரணமே, அந்த கும்பலின் கத்திபோல் மின்னும் நாக்கே. அது பிறரை வெட்டுவது, வார்த்தைகளால் பிறரைக் காயப்படுத்துவது, எவ்வெப்பொழுதெல்லாம் அந்த நாக்கான கூரிய கத்தி,தன் வாயாம் உரையிலிருந்து வெளி வருகிறதோ அவ்வப்போதெல்லாம் அதன் கூரிய நுனியால் மின்னி, கண்ணையே கூசிடச் செய்வது. எனவே பார்வை பறிபோகிறது. எனவே விவேகமற்று யாரைப் பற்றியும், எதுவும் பேசிடத் துணிகிறது. இதிலே உற்று நோக்க வேண்டியதோ, அது குற்ற உரைகளை सदन्तिके-நல்லோரிடமே, ராமனையே தாரக போஷக போக்யமாய் கொண்டு, அவனையே த்யானிப்பவரிடமே, அவ்வாறு பேசிடத் துணிகிறது. அவர்கள் வருந்துவரே என்றோ, ஒருவேளை அதிகமாக பேசினால் அவர்கள் கோபமுற்று ஶாபாதிகளை அளித்திடுவரே என்றோ கிஞ்சித்தும் கணிசியாமல் அவர்கள் அருகாமையை அடைந்து, ராமனைக் குறை கூறும் குருட்டுக் கூட்டம் அது.

இங்கே 'நிரவதி' என்ற பதத்தைத் தனியாக்கி அதை க்ரியாவிஶேஷண மாய்க் (adverb) கொண்டாலும் சரியே. 'நிரவதி வதந்தி' என்பதால் ஏதோ ஒருமுறை ராமனைத் தவறு கூறி நிறுத்தாது, 'ஸதந்திகே நிரவதி வதந்தி'- நல்லோரிடம் அளவின்றி ராமதூஷணம் செய் கிறது என்று கொள்ளவும் வாய்ப்பு உள்ளது.

- ஸ்த்ரீஹத்யா- தாடகா வதத்திலும்,
- வாலித்ரோஹம்- வாலியை மறைந்து அடித்ததிலும்,
- மனாகபஸர்ப்பணம்- சிறிதே பின்வாங்குதல்

என மூன்று தோஷங்கள் காட்டப்படுகின்றன .

*இவை ஸ்வாமி தாமே காட்டக் கூடியவை அன்று . அவர் ராமன் விஷயத்தில் இவ்வாறு ஸாதிக்கவும் மாட்டார். இவை வேறொரு கவி சொன்னதின் அனுவாதமே. பவபூதி மஹாகவி தமது உத்தரராமசரித நாடகத்தில்*

**वृद्धास्ते न विचारणीयचरिताः तिष्ठन्तु किं वर्ण्यते**
**सुन्दस्त्रीदमनेऽप्यकुण्ठयशसो लोके महान्तो हि ते।**
**यानि त्रीण्यकुतोमुखान्यपि पदान्यासन् खरायोधने**
**यद्वा पौरुषमिन्द्रसूनुनिधने तत्राप्यभिज्ञो जनः।।**

*என்ற ஶ்லோகத்தில் குஶ வாக்யமாய் உள்ளது. இவ்வாறு ராம விஷயகதோஷாரோபணம் செய்யவும் கூட ஒரு துணிவு வேண்டும். ஆனால் அஹங்காரிகளாய், க்ஷாத்ரம் கொண்டவர்களாய் இருக்கும் ஸதஸத்விவேகபுத்தி ஹீனர்கள் பயமற்று, யாரையும் பற்றி எதுவும் பேசுவோம் என்பதுதான் அநிபுணர்களின் செயல். அப்பேர்ப்பட்டோர் ராமனையே நிந்திப்பரேல், அதற்கு எதிர்த்தட்டில் பரிமிதகுணராய் ஒரு சில வேளைகளில் குறிப்பிட்ட ஒரு சில குணங்கள் மட்டுமே உள்ளவர்களாகவும் தெளிவாக தோஷங்கள் உடையவருமான நம் போல்வரிடத்தில் வாய் மூடி, த்ருப்தியுடன் நல்லோர்களாய் மௌனத்தைக் கைக் கொள்வரோ?*

*'பரிமிதகுண, ஸ்பஷ்டாவத்ய' என்பன ராமகுணங்களாய்ச் சொல்லப் பட்ட 'நிரவதி, குண கிராம மற்றும் நிராகஸ்' என்ற பதங்களுக்கு எதிர்த்தட்டில்ए இருப்பவை.*

*எனவே ராமனிடமே தோஷம் காணும் குருடர்கள் நம் போன்றோரைப் பேசியே கொல்வர் என்றும், அவர்களது விவேகமற்ற தன்மையே இதற்குக் காரணம் என்றும், அவர்களை விட்டொழித்தலே இதற்கு மருந்து என்றும் போதிக்கிறது இந்த ஶ்லோகம்.*

*இவ்வாறு ஸுபாஷித நீவியின் ஒவ்வொரு ஶ்லோகமுமே ஶ்லேஷையினால் பல அர்த்தங்களை அளிப்பதாயும், பண்டிதர்களுக்குப் பரம போக்யமாகவும் அமைகிறது.*

*இந்த ஸஞ்சிகையில் வெளியிட அங்கீகரித்து அதனை செயலாற்றிட்ட ஸ்ரீ விஜயராகவாச்சார்யாருக்கு தன்யவாதங்களையும் ஸமர்ப்பித்து அமைகிறேன்.*

*ஸ்வாமிதேஶிகன் திருவடிகளே ஶரணம்.*

*தாஸன்*

# தேசிகநிதி தரும் சேமநிதி

(ஜெ. சடகோபன், வில்லிவாக்கம், சென்னை 49)

**'நமக்கோர் விதி வாய்கின்றதே'** என்று தனது தமிழ்ப் ப்ரபந்தமான அதிகார ஸங்க்ரஹத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்துள்ளார் ; ஆம், அது எத்துணை ஸத்யம் என்று நமக்கு இந்தக் கலியில் தெரிய வருகிறது ; ஸ்வாமி தேசிகனின் திருவவதாரம் நம் போன்ற சேதனர்களுக்காக காருண்யத்தின் பேரில் ஏற்பட்டது என்று கூறலாம்; ஸ்வாமி தேசிகன் நமக்கு பற்பல க்ரந்தங்களை ஆக்கிக் கொடுத்திருக்கிறார் ; நம் போன்ற பாமரர்களுக்கென்று எளிதில் புரிந்து கொள்ளும்படியான க்ரந்தங்களும், பண்டிதர்கள் ஆராய்ந்து அலசும்படி பொருள் செறிவுடன் கூடின க்ரந்தங்களும் இதில் அடங்கும் ; நாம், இந்த சிறு வ்யாஸத்தில் ஸ்வாமி தேசிகன் எனும் மாபெரும் நிதி நமக்காக விட்டுச்சென்ற சேமநிதியைப் பற்றி ஒரு சில அமிர்ததுளிகளான கருத்துப் பதிவுகளைக் காண்போம் ; இதில் ஏதேனும் பிழையோ / தவறோ இருப்பின், அடியேனை க்ஷமையுடன் பணிக்கக் கோருகிறேன்.

## 1. ஸ்வாமி தேசிகன் சரிதம் :-

ஸ்வாமி தேசிகனைப் பற்றின சரிதத்தினை அனைவரும் அறிவர் ; அவர் திருமலையில் கர்ப்ப க்ரஹத்தில் உள்ள திருமணியின் அம்சம் என்றும், ஏன், திருவேங்கடவனே ஸ்வாமி தேசிகனாக திருவவதாரம் செய்துள்ளான் என்பதும் அனைவரும் அறிந்த ஒன்று ; அவர் திருவவதாரம் புரிந்து 750 வருடங்கள் கழிந்தும், அவர் நம் நினைவில் நிற்கிறார் என்றால் அங்கு தான் அவரின் விஸ்வரூப ப்ரபாவம் வெளிப்படுகின்றது ; அவரின் வரலாற்றுப் பக்கங்களை ஒரு முறை பார்த்தோமானால், நமக்கு ஒன்று புலனாகிறது ; அவர் தமக்காக வாழாமல், நம் பொருட்டு, நம்மை கடைத்தேறும் பொருட்டு , நமக்கு ஒரு சேமநிதியாக ( ஆத்ம பாதுகாப்பு பெட்டகம் ) வாழ்ந்தார் என்பதே ஸத்யம் ; நாம் வங்கிகளில் Safe Deposit Locker ( பாதுகாப்பு வைப்பு பெட்டகம் ) வைத்துள்ளோம் ; அதில் விலை உயர்ந்த நகைகள், ஆபரணங்கள், மற்றும் வீட்டுப்பத்திரங்கள் போன்றவற்றை வைக்கிறோம் ; எதற்காக ? ; தொலைந்து போகாமல் இருப்பதற்காகவும் மேலும் எப்பொழுது வேண்டுமானாலும் சென்று அந்த நிதியினை சரிபார்த்து அதன் மதிப்பினை தெரிந்து கொள்ளவுமன்றோ ? ஆனால், இது எவ்வளவு நாள் நடக்கும், நமக்கு முடியும் வரை அல்லவா ! நமது ஆயுட்காலம் வரையிலும்தான், அதுவும் நமது அனைத்து இந்திரியங்களும் செயலிழக்காமல்

இருக்கும்வரை தானே ! ஆனால் ஆத்ம பாதுகாப்பு நிதி அவ்வாறல்ல !! நமக்கு இப்புவியிலும் ஆனந்தம், இப்புவியை விட்டு சென்றாலும் ஆனந்தம் ; நம்முடனே பயணிக்கும் ஒரு நிதி உண்டென்றால் அது ஆத்ம பாதுகாப்பு நிதி ; அந்த ஆத்ம பாதுகாப்பு நிதி வேறு ஒன்றும் இல்லை , ப்ரபத்தி என்று அழைக்கப்படுகிறது. எளிய உபாயம்; மிகப் பெரிய பலன்; யாராவது தவறவும் விடுவார்களா, என்ன ! அந்த நிதியினை நமக்கு எளிதாகச் சொல்லி, நம்மை அநுஷ்டிக்க வைப்பவர் ஸ்வாமி தேசிகன்; அவர் ஒரு மிகப்பெரிய வள்ளல் / மஹான் என்று கூறலாம்.

## 2. ஸ்வாமி தேசிகனை ஸகலமாகவும் கொண்டவர் - ஸ்ரீ ஸேவா ஸ்வாமி ( ஓர் அறிமுகம் ):-

அடியேன் இத்தருணத்தில் ஒருவரைப்பற்றி நினைக்க வேண்டும் ; அவர் ஸ்வாமி தேசிகனையே தாரக, போஷக, போக்யமாக ( உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெத்திலை ) கொண்டவர் ; ஸ்வாமி தேசிகனையே உள்ளும் புறமும் நினைத்து வாழ்ந்தவர்; மேலும், ஸ்வாமி தேசிகனையே ஸ்வாசமாகக் கொண்டவர் ; அவர் தான் சென்னைப் புறநகரான வில்லிவாக்கத்தில், ஸ்வாமி தேசிகனுக்காக ப்ரத்யேகமாக ஒரு இடத்தினை அமைத்து அதற்கு '**மணிமண்டபம்**' என்று திருப்பெயர் சூட்டினார் ; அங்கு முதலில் ஸ்வாமி தேசிகன் தன்னுடன் கூட ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவருடன் எழுந்தருளினார் ; அதன் பிறகு ஒவ்வொரு திவ்யமூர்த்தியாக எழுந்தருளி தற்பொழுது, ஞான அதிஷ்டான மூர்த்திகளாக ஐவர் ( முறையே ஸ்ரீஆனந்தலக்ஷ்மீ தாயாருடன் ஸ்ரீஹயக்ரீவர், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீபாஷ்யகாரர் மற்றும் கடைக்குட்டியாக இருக்கும் ஸ்வாமி தேசிகன் ) உள்ளனர்; ஓரஞ்சலியால் அனைவரையும் ஸேவித்த பலன் என்ற அற்புத ஸந்நிவேஸம். அந்த மஹான் ஸ்வாமி தேசிகன் யார் என்பதற்கு அற்புத விளக்கம் அளித்துள்ளார். அதனை நாம் சிறிது காண்போம்.

## 3. ஸ்வாமி தேசிகன் யார் ?

தேசிக என்ற பதத்தில் மூன்று எழுத்துக்கள் உள்ளன. அவை முறையே தே , சி, மற்றும் க . இதன் பொருளை ஸ்ரீ ஸேவா ஸ்வாமி கூற்றின்படி இங்கு காண்போம் :-

**தேசிக: பத எழுத்துக்களின் விரிவாக்கம் :-**

தேசிக: என்ற பதத்திற்கு ஸ்ரீ ஸேவா ஸ்வாமிகள் அருளியுள்ள விளக்கத்தினை தற்பொழுது பார்க்கலாம் .

**i ) . தே - தேவாத்** - திருவேங்கடவாணனும் அவனே, வேங்கடநாதனும் அவனே ; வேங்கடம் என்றால் பாபம் நீங்கும் என்று அர்த்தம் - இதற்கும் எடுத்துக்காட்டாக ஸ்வாமி தேசிகன் பற்பல அற்புத நூல்களைப் படைத்துள்ளார் ; பகவானுக்கு கருணை என்ற குணத்தின் மூலமே மற்ற குணங்கள் ப்ரகாசிக்கிறது என்றும் மற்ற குணங்கள் தயைக்கு ஸேவகம் புரிகிறது என்றும் **(தயா சதகம்11ம்ஸ்லோகம்),** அதைப்போலவே ஸ்வாமி தேசிகனும் தனது வாழ்க்கையில் பற்பல தருணங்களில் இதனை அநுசரித்துக் காட்டியுள்ளார்.

**ii ) . சி - சிஷ்ய குண அனுக்ரஹாத் மற்றும் சிஷ்ய குண பூர்ணத்வாத்** - "குரும் ப்ரகாசயேத் தீமான்" என்ற வசனத்திற்கு ஏற்றவாறு இருந்தவர் என்றும், தனது மாதுலர் அப்புள்ளார் தான் தன்னை கிளிப்பிள்ளையை பழக்குமாப்போல் பழக்கினார் என்றும் ஆசார்ய பக்தியை வெளிப்படுத்தினார் ; மேலும் தமிழ், வடமொழி, ப்ராக்ருதம் மற்றும் மணிப்ரவாளம் என அனைத்திலும் நூல்களை செய்து அதனை நம் போலுள்ளோர் உய்ய வழி வகுத்தார், சிஷ்யர்களிடத்தில் வாஞ்சையுடன் நடந்து கொண்டார் என்றும் அவரின் வாழ்க்கையிலிருந்து தெரிகிறது ; அபரிமிதமான ஞானம் மற்றும் அதற்கு சற்றும் குறைவில்லா அநுஷ்டானம் மற்றும் வைராக்யம் - இது ஸ்வாமி தேசிகனுக்கே உரித்தான ஒன்று என்றும், ப்ரமாண புரஸ்தரராகவும் வேதத்தையும் தர்ம சாஸ்த்ரத்தையும் போஷிப்பவராகவும் திகழ்ந்தார்.

**iii ) . க: - காருண்யாத் - கருணையின் இருப்பிடம் / பிறப்பிடம்** - நம் போன்றோரின் மேலுள்ள அதீத கருணையினால் அன்றோ நமக்கு பற்பல நூல்கள் ( 5,8,20,50,100,1000 மற்றும் 2000த்துக்கும் மேல் ஸ்லோகங்களைக் கொண்டுள்ள பல நூல்கள் இதில் அடங்கும் ) ஆக்கிக்கொடுத்துள்ளார். நாம் இந்தப் பிறவியில் ஒரு முறை சரணாகதி செய்தாலே போதும், அதை பகவான் அங்கீகரித்து அதனை ஏற்றுக்கொண்டு நமக்கு வானேறப் போமளவும் ஆனந்த வாழ்வினை அளிப்பான். மேலும், சரணாகதி ஒரு உபாயமாகும், அது ஸ்வதந்த்ரமானது . மேலும், பகவானை செயல் இழக்க செய்ய வேண்டுமென்றால் அதற்குள்ள ஒரே வழி அவனிடம் அஞ்சலி செலுத்துவது என்று அஞ்சலி வைபவத்தின் ப்ரபாவத்தினை தெளிவுபட காட்டியுள்ளார். ( எத்தனை அஸ்த்ரங்கள் என் மேல் ஏவினாலும் அடியேன் செய்யும் அஞ்சலி முத்திரையின் மூலம் அந்த அஸ்த்ரங்கள் செயல் இழக்கும் என்று வரதராஜ பஞ்சாசத் 30வது ஸ்லோகத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதித்துள்ளார். இவரல்லவோ நமது ஆசார்யர் -

நம்மை கட்டி அணைத்துக் கொண்டு பகவானைக் காட்டிக் கொடுத்து அவன் திருவடிகளைப் பற்ற வழி வகுத்துள்ளார் ) .

**4. ஸ்வாமி தேசிகன் - பகவத், பாகவத ஆசார்ய ஸ்வரூபமே :-**
ஸ்வாமி தேசிகன் நம் பொருட்டு பற்பல க்ரந்தங்கள் பல மொழிகளில் செய்துள்ளார் ( வடமொழி, தமிழ், மணிப்ரவாளம் மற்றும் ப்ராகிருதம் ) ; அவர் பகவானா , ஆசார்யனா , உடையவரின் அம்சமா ஆழ்வார்களின் ப்ரதிநிதியா என்றால் அவர் அனைத்துமே என்பது தான் ஸத்யம் - அவர் பகவானே - எவ்வாறென்றால் அவர் ஸாக்ஷாத் திருவேங்கடமுடையானே **( பிள்ளையந்தாதியில் வரும் ஐந்தாவது பாசுரம் - திருவேங்கடநாதன் எனும் ...) .** உடையவரின் திருவம்சம் **( ஸ்வாமி தேசிகன் இதனை தனது யதிராஜ சப்ததி ஸ்தோத்ரத்தில் தெரிவிக்கிறார் ),** அனைத்து ஆசார்யர்கள் மற்றும் ஆழ்வார்களின் ப்ரதிநிதி என்றும் கொள்ளலாம் ( ஸ்வாமி தனது தமிழ்ப் ப்ரபந்தங்களில் ஸாதிக்கிறார் - நாதமுனி கழலே ! : நாலாயிரமும் எங்கள் வாழ்வு ! போன்ற பல பதங்கள் இதனை பறை சாற்றுகின்றன ) . ஆக , ஸ்வாமி தேசிகன் பகவத், பாகவத, ஆழ்வார் ஆசார்யர்களின் ஒருமித்த ஸ்வரூபமாகும். அவரின் தாள்களை கெட்டியாக பற்றினோமானால் நமக்கு எம்பெருமானின் திருவருள் ஸர்வ நிச்சயம் !! இதில் எள்ளளவும் ஸந்தேஹம் வேண்டாம்.

**5. ஸம்ப்ரதாய பூர்த்தி :-**
இவ்வாறாக, இந்த சிறிய சீரிய வ்யாஸத்தில் ஸ்வாமி தேசிகன் நமக்கெல்லாம் கிடைத்த ஒரு சேமநிதியாகக் கண்டு ஆனந்தமுற்றோம் ; நாம் கண்டது ஒரு சில அமிர்த துளிகளே ஆகும் ; இன்னும் காண வேண்டியது பற்பல உள்ளன; அதனை மற்றுமொரு வ்யாஸத்தில் பின்னர் கண்டு இன்புறுவோம் ; ஸ்வாமி தேசிகனை நாம் கெட்டியாக பிடித்துக் கொண்டோமானால், மண்ணின் நோய்களும் தீரும், மண் மேல் நிற்கும் கர்மவினை எனும் நோயும் தீரும் ; இது திண்ணம் ; நமக்கெல்லாம் கிடைத்துள்ள இந்த பொன்னான அரிய வாய்ப்பினை தவற விடாமல், அதனை பயன்படுத்துக் கொண்டு, ஸ்வாமி தேசிகன் சரணாரவிந்தம் பணிவோம் ; கோதையின் கூற்றின்படி எங்கும் ( இங்கும் , அங்கும் ) திருவருள் பெறுவோம் !! ஸ்வாமி தேசிகனின் தாள்களைப் பற்றினால் அது நம்மை எம்பெருமானின் திருவடி தாமரைகள் வரை கொண்டு செல்லும். இது முற்றிலும் உண்மை !!

ஆழ்வார், எம்பெருமானார், ஸ்வாமி தேசிகன் மற்றும் ஆசார்யன் திருவடிகளே சரணம் !!

## (திருவேங்கடமுடையான்) அவதாரம் - விளக்கம்
### (ஸ்ரீ.உ.வே.வித்வான். திருவள்ளூர். திருமலை. ஈச்சம்பாடி. ரங்கநாதார்ய மஹாதேசிகன்)

திருவேங்கடமுடையானின் ஸாக்ஷாத் அவதாரம் என்றும், அவருடைய திருக்கண்டையின் அவதாரம் என்றும், ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரம் என்றும் விகல்பித்து நிரூபித்திருந்தபோதிலும், பிள்ளையந்தாதியில் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருப்பதாலும், அப்யர்ஹித ந்யாயத்தாலும், ஸ்வாமியினுடைய அவதார சரித்ர விசேஷங்களினாலும் ஸ்வாமி, வேங்கடேசனுடைய ஸாக்ஷாத் அவதாரம் என்பது ஸ்பஷ்டமாக ஏற்படும்.

சில ஸாத்ருச்யாதிகளை முன்னிட்டு கண்டாம்சாதி விகல்பங்கள் என்று அறியவேண்டும். திவ்ய கண்டை என்கிற வ்யாஜத்தை இட்டுத் தாம் அவதரித்தருளின்படியை ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் நிரூபித்து அருளினாற்போலே, தாம் ஸாக்ஷாத் பகவத் அவதாரம் என்பதையும் அந்த க்ரந்தத்திலேயே அருளிச்செய்திருக்கிறார். எம்பெருமானாரை விச்வாமித்ரராகவும், தம்மைச் சக்ரவர்த்தித் திருமகனாகவும் நிரூபித்து அருளியிருப்பதால், ஸ்வாமி வேங்கடேசனின் ஸாக்ஷாத் அவதாரம் என்பது ஸூசிப்பிக்கப்பட்டது ஆகிறது.

பகவானுடைய திருமணி ஆழ்வார் எப்படித் தம்முடைய சப்தத்தால் பகவந் நிவேதிதம் ஆகும் வஸ்துக்களை அஸுரர்கள் வந்து ஆக்ரமிக்காமல் அவர்களைத் தடுத்து பகவானுக்கே உபயோகப் படும்படி செய்கிறாரோ, அதைப் போலவே ஸ்வாமியும் பகவானுடைய விபூதிகள் ஆகிற இந்தச் சேதன அசேதன வர்க்கங்களை அபஹாரம் செய்யும் ஆஸுர ப்ரக்ருதிகளைத் தம்முடைய நாவினால் வென்று பகவானுக்கே சேஷபூதங்கள் என்று நிலைநிறுத்தினபடியால், 'கண்டாம்சம் என்று உத்ப்ரேக்ஷித்தபடி.

இப்படி அன்றிக்கே இவரைக் கேவலம் கண்டாம்சம் என்னில், சக்ரவர்த்தித் திருமகன் கேவலம் பாயஸ அவதாரம் என்ன ப்ரஸங்கிக்கும்.



# திருச்சின்ன மாலை

**(காஞ்சீபுரம் (16) - ப்ரபந்தம் - 11)**



***இது 11 பாட்டுக்கள் அடங்கியது. இதில் ஸ்ரீதேவப் பெருமாளுடைய திருச்சின்ன வாத்யத்தின் ஓசையானது திருமந்திரம் முதலியவற்றின் அர்த்தங்களைப் ப்ரதிபாதிக்கிறதாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.***

***முதல் ஆறு பாட்டுக்களில் திருமந்திரத்தின் அர்த்தமும்***

***ஏழாம் பாட்டில் த்வயத்தின் அர்த்தமும்***

***எட்டாம் பாட்டில் சரம ஸ்லோகத்தின் அர்த்தமும்***

***ஒன்பதாம் பாட்டில் பகவானுடைய சேஷ்டிதங்களும் ஸௌலப்யகாரிதமான திவ்ய அர்த்தங்கள்***

***பத்தாம்பாட்டில் இப்படிப்பட்ட பகவான் ஸ்ரீஹஸ்திகிரியிலே ஸேவை ஸாதிப்பதும்***

***பதினோறாம்பாட்டில் இவ்வர்த்தங்கள் தமக்கு ஸதாசார்யோபதேயத்தால் கிடைத்தவை என்பதும் நிரூ பிக்கப்பட்டிருக்கின்றன.***

********

# பிறவிப்பயனடைய வழிகோலும் தேசிகர்

## கஸ்தூரிரெங்கன்

ஒவ்வொரு ஜீவனும் கோடானு கோடியான பிறவிச் சுழலில் சிக்கித் தவிப்பதில் இருந்து விடுபட்டு பகவானின் நித்ய கைங்கர்யத்தில் ஈடுபட்டு அளவிலா பேரின்ப பெருவாழ்வு பெறவேண்டும் என்பதே நம்மைப் படைத்தவரின் அவா, அப்படி கிடைத்தற்கரிய மனிதப் பிறப்பெடுத்த நாம் நம்முடைய விசேஷ அறிவான பகுத்தறிவைக் கொண்டு விவேக ஞானத்தைப் பெற இடைவிடாது முயற்சி செய்ய வேண்டும்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தக்குடி தமிழ்க்குடி, "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது" என்றார் வள்ளுவப்பெருந்தகை. அத்தகைய தமிழ்க்குடியில் தோன்றிய பன்னிரு ஆழ்வார்களும் "வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே" - என்று பரமபதத்தை அடைய வேதங்களையே தமிழில் நாலாயிரம் திவ்ய ப்ரபந்தங்களாக அருளிச் செய்துள்ளனர்.



"உய்ய ஒரே வழி உடையவர் திருவடி" என்ற சொற்றொடருக்கு ஏற்ப பகவத் இராமனுசர் வழிநின்ற நம் தூப்புல் வள்ளலோ "தேசிக ப்ரபந்தம்" என்று நல்இரத்தினங்களான நானூற்று ஐந்து தமிழ்ப் பாசுரங்களிலேயே விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலை நாட்டினார். பிள்ளை லோகாச்சாரியார் என்ற மஹான் அப்படிப்பட்ட தேசிக ப்ரபந்தத்திற்கு அமைத்த தனியனில் "ஒரொன்று தானே அமையாதோ வானேறப் போமளவும் வாழ்வு " என்று சாதித்துள்ளார்.

கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் நாம் நம்முடைய கர்ம வசத்தால் 32 அடி விட்டம் கொண்ட சம்சாரமாகிய பாழுங் கிணற்றைத் தாண் முயல்கிறோம்.

மனையடி சாஸ்த்ரம் கூட 32 அடிக்கு முகுந்தன் அருள் கிட்டும் என்கிறது. அதனால் நம் வேதாந்த தேசிகர் அருளிய இரத்தினக்குவியலில் இருந்து நித்யபடி பாராயணம் செய்து நன்மை பெறுவோம்.



ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகாய நம:
(சித்திர முயற்சி: அடியேன் க்ருஷ்ணகுமார தாத தாஸன்,



பூனா)ப்ரணமாம் லஷ்மண முனி ப்ரதிருஹ்ணாது மாமகம்
பிரசாதயாதி யத் ஸூக்தி ஸ்வாதீந பதிகாம் ச்ருதிம்

உபவீதிநம் ஊர்த்வ புண்ட்ரவந்தம்
த்ரிஜகத் புண்ய பலம் த்ரிதண்ட ஹஸ்தம்
சரணா கத சார்த்த வாஹம் ஈடே
சிகாயா சேகரிணம் பதிம் யதீ நாம் -

----யதிராஜ ஸப்ததி

# ராமானுஜ தயா பாத்ரம் தேசிகனின் வைபவத்தின் வைபவம்

ஸ்ரீ வாத்ஸ்ய ஸ்ரீ க்ருஷ்ணமார்ய மஹாதேசிகனின் அந்தேவாசி
முகுந்தகிரி ஸ்ரீ உ.வே அனந்த பத்மநாபாசாரியார் ஸ்வாமி

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாயநம:
ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாயநம:

**ராமானுஜ தயா பாத்ரம் – தேசிகனின் வைபவத்தின் வைபவம்**

ஸ்வாமி தேசிகனின் வைபவத்தை நாம் அறிந்திடவும், அதனை பகிர்ந்திடவும் முயற்சித்தல், எளிதான செயல் அன்று.ஸ்வாமியின் வைபவத்தின் வைபவம் அத்தகையதாகும். ஸ்வாமி பாதுகா ஸஹஸ்ரத்தில், பாதுகையின் ப்ரபாவத்தை கூறும் பொழுது, "ஆகாயம் முழுதும் காகிதமாக கொண்டு, ஏழு ஸமுத்ரங்களை மையாக கொண்டு, 1000 தலைகள் மற்றும் கண்கள் கொண்ட அந்த பரந்தாமனே வந்து எழுதினால், ஒரு வேளை எழுத முடியுமோ என்னவோ" என்று சாதிக்கின்றார்.

**निश्शेषमम्बरतलं यदि पत्रिका स्यात् सप्तार्णवी यदि समेत्य मषी भवित्री ।
वक्ता सहस्रवदनः पुरुषः स्वयं चेत् लिख्येत रङ्गपतिपादुकयोः प्रभावः।। 3.2**

இது பாதுகைக்கு மட்டும் இன்றி, பாதுகா சேவகராம் ஸ்வாமி தேசிகனுக்கும் உபலக்ஷணம். ஸ்வாமியின் பெருமையின் ப்ரபாவமும் அப்படியே ஆகும்.

ஸ்வாமி தேசிகன், பல க்ரந்தங்களை, பல மொழிகளில் அருளியுள்ளார். தேசிகனின் ப்ரபாவத்தையும், க்ரந்தங்களையும் அறிந்து கொள்ள நம் ஆயுள் போதாது. ஆயினும்தேசிகனின் ஒரு பாசுரம் பயின்றாலே, அது நமக்கு பரமபதத்திற்கு சோபானமாக (அதாவது படியாக) அமையும். இதையே, "ஓர் ஒன்று தானே அமையாதோ, தாரணியில் வாழ்வோருக்கு வானேற போமளவும் வாழ்வு" என்று ஸ்வாமி தேசிகனின் தனியனிலும் அறிகிறோம், போற்றி துதிக்கின்றோம்.

**தேசிக அடியாரின் ரஹஸ்ய த்ரயம்:**

நம் ஸம்ப்ரதாயத்தில், தத்வ த்ரயம், ரஹஸ்ய த்ரயம் போன்ற விஷயங்களை காணலாம்.தேசிகனின் அடியார்கள் அறிய வேண்டிய மூன்று விஷயம் என்ன என்றால் அது தேசிகனின் மூன்று தனியன்களே ஆகும். அவையாவன,

**1. ஸ்ரீ நயினாராசார்யர் அருளிச்செய்ததனியன்:**

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்கிககேஸரீ |
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||

**2. ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி அருளிச்செய்ததனியன்:**

ராமானுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ||

**3. பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்ததனியன்:**

சீர் ஒன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பார் ஒன்றச் சொன்ன பழமொழியுள் – ஓர் ஒன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வான் ஏறப் போம் அளவும் வாழ்வு.

**ராமானுஜ தயா பாத்ரம்தனியன் அவதாரம்:**

ஒரு சமயம் ஸ்வாமி தேசிகன், தன் குமாரர் வரதாசார்யர், ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரர் மற்றும் சிஷ்யர்கள் சூழ, திருநாராயணபுரம் /மேல்கோட்டை எழுந்தருளினார். அங்கு, ஸ்வாமியின் திருக்குமாரர் பகவத் விஷய" காலக்ஷேபம் சொல்லத் தொடங்கினார். ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ரர், தேசிகனின் அனுமதியைப் பெற்று, காலக்ஷேப கோஷ்டியில் அமர்ந்து ஸ்வாமியின் திருக்குமாரர் பற்றிய கீழ்கண்ட தனியனை அனுஸந்தித்தார்.

ஸ்ரீ மந் லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் |
விச்வா மித்ர குலோத் பூதம் வரதார்யமஹம் பஜே ||

பிறகு, தர்சனப்ரவர்த்தகர் ஸ்ரீ உடையவரின் பரிபூர்ண கடாக்ஷத்துக்கும்,தாய் மாமாவானஸ்ரீ அப்புள்ளாரின் பரிபூர்ண கடாக்ஷத்துக்கும் பாத்ரரான ஸ்வாமி தேசிகன் விஷயமாக,

ராமானுஜ தயா பாத்ரம் ஜ்ஞான வைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம் ||

என்கிற தனியனை அனுஸந்தித்து, பிறகு குரு பரம்பரையைச் சொல்லி, பகவத் விஷய காலக்ஷேபத்தைக் கேட்கத்

தொடங்கினார்.
இதனை அறிந்த ஸ்வாமி தேசிகன், "ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய" என்கிற தனியன், தன்னுடைய பெருமையைச் சொல்கிறது. "ராமானுஜ தயாபாத்ரம்...." என்கிற தனியன், தனக்கு ஏற்பட்டுள்ள சதாசார்ய கடாக்ஷப் பெருமையைச் சொல்கிறதுஎன்று சந்தோஷப்பட்டார். பின்னர் "ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய:" என்கிற தனியன் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபத்தின் போது அநுஸந்திக்கும் படியும் "ராமானுஜ தயா பாத்ரம்" என்கிற தனியன் "பகவத் விஷய" காலக்ஷேபத்தின்போது அநுஸந்திக்கும்படியும் நியமித்தார். இவ்வாறு பஹுதான்ய வருடம், ஆவணி ஹஸ்தம் நன்னாளில் ராமானுஜ தயா பாத்ரம் தனியன் அவதாரம்.பின்னர் ஸ்ரீரங்கநாதனின் நியமனத்தின் படி தமிழ் பிரபந்தங்களை ஸேவிக்கும் முன்இந்த தனியனை அநுஸந்திக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

**ஆசார்ய தனியனின் தனிப்பெருமை:**

கருணையினால் ஜ்ஞானத்தை அளித்து, நாம் நற்கதி அடைய வழி வகுக்கும் ஆசார்யனுக்கு, சிஷ்யன் கைமாறு செய்ய முடியுமா என்றால், முடியாது. அப்படி இருக்க, சிஷ்யன் ஆசார்யன் மேல் கொண்டுள்ள பக்தியை எப்படி வெளிப்படுத்துவது என்பதற்கு பூர்வர்கள் நான்குவித விஷயங்களை கூறியுள்ளனர். அவையாவன,

1. ஆசார்யன் பெருமை புலனாகும் படியாக அவரை பற்றிய ச்லோகம் எழுதி,அவரிடம் ஸமர்ப்பித்து, அவரின் அனுமதியின் பெயரில் அவரை பற்றிய துதி பாடல்களை பாடுவது.
2. விரலை வெட்டி ஆசார்யனுக்கு காணிக்கையாக ஸமர்பிப்பது.
3. மார்பில் ஆசார்யன் பெயரை பச்சை குத்திக்கொள்வது.
4. ஆசார்யன் திருவடி என்று நம்மை ஆசார்யனின் தாஸனாக அறிமுகம் செய்து கொள்வது. இதனையே ஸ்ரீவைஷ்ணவ அடியார்களாகிய நாம் "அடியேன் ராமானுஜ தாஸன்" என்று பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

இதில் நம் ஆசார்யர்கள் ஸாத்வீகமான முறையையே நாம் பின்பற்ற உபதேசித்தனர்.சிஷ்யர்கள் ஆசார்யனுக்கு தனியன் ஸமர்ப்பித்தல், அவரின் பெருமையையும் குணங்களையும் போற்றும் தனியனை நித்யம் அனுஸந்தானம் செய்தல், நம்

ஆசார்யர்கள் உகந்தஅனுஷ்டானங்கள் ஆகும்.
இதையொட்டியே ஸ்வாமி தேசிகனின் ப்ரதான சிஷ்யர் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர், ஸ்வாமி தேசிகனின் மேல் இருந்த அபரிமிதமான ஆசார்ய பக்தியினால் அருளியது ”ராமானுஜ தயா பாத்ரம்” என்னும் தனியன் ஆகும்.

**ராமானுஜ தயா:**

“ராமானுஜ தயா” – இந்த பதத்தின் அர்த்தத்தை நாம் அறிந்தோம் என்றால் அனைத்தையும் அறிந்தவர் ஆகின்றோம்.

**ராமானுஜரின்தயைக்கு பாத்திரமானதேசிகன்**

ராமானுஜரின் தயைக்கு, கருணைக்குபாத்ரமானவர்என்பது முதல்விளக்கம்.

ஸ்வாமி தேசிகனின் திருக் குமாரர் —குமார வரதாசார்யர் —- தன்னுடைய பிள்ளை அந்தாதியில்,

**மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்து உறை மார்பினன் ,தாள்
தூமலர் சூடிய தொல் அருள் மாறன் துணை அடிக்கீழ்
வாழ்வை உகக்கும் இராமாநுச முனி வண்மை போற்றும்
சீர்மையன் எங்கள் தூப்புல் பிள்ளை பாதம்என் சென்னியதே .**

ராமானுஜரின் வண்மையைப் போற்றும், சீர்மையன்—என்று ஸ்ரீ நயினாசார்யர் சொல்கிறார்.எங்கள் தூப்புல் பிள்ளை—ஸ்வாமி தேசிகனின் திருவடிகள்—என் சென்னியதே—-என் தலைமேல் இருக்கிறது–என்று, ஸ்ரீ நயினாசார்யர்,பாசுரமிடுகிறார்.
இராமாநுசமுனி வண்மை போற்றும் சீர்மையன்—ஆதலால், ராமானுஜ தயா பாத்ரர். அதுமட்டுமல்ல ராமானுஜரின் மறுஅவதாரம் அன்றோ நம் ஸ்வாமி தேசிகன்.

**நான்கு பிரதானமான திவ்ய தேசங்கள்:**

**ஸ்ரீரங்க மங்கள நிதிம் கருணா நிவாஸம்
ஸ்ரீ வேங்கடாத்ரி சிகராலய காள மேகம்
ஸ்ரீ ஹஸ்திஸைல சிகரோஜ்வல பாரிஜாதம்
ஸ்ரீசம் நமாமி சிரஸா யதுசைல தீபம்**

என திருவரங்கம், திருமலை,திருக்கச்சி, திருயாதவகிரி ஆகிய நான்கு பிரதானமான திவ்ய தேசங்களை வணங்குகிறோம்.இந்த திவ்ய தேசங்களுக்கும் ராமானுஜ சப்தத்திற்கும் உள்ள தொடர்பை விரிவாக காணலாம்.

## ஸ்ரீரங்கநாதனின் தயைக்கு பாத்திரமானதேசிகன்:

பூலோக வைகுண்ட க்ஷேத்திரம் "ஸ்ரீரங்கத்தில்" பெரிய பெருமாளாக, ப்ராணாவகார விமானத்தின் கீழ், பள்ளி கொண்டுள்ளான் ஸ்ரீரங்கநாதன். ரங்கநாதனுக்கு ராமானுஜன் என்னும் பெயர் உண்டு. அன்மொழித்தொகையின் படி "எவனுக்கு ராமன் இளையவனோ அவன் ராமானுஜன்". ராமனுக்கு முன்னரே திருஅயோத்தியில் எழுந்தருளிய பெருமாள் ஸ்ரீரங்கநாதன். ப்ரம்ம தேவன் இஷ்வாகு குலத்திற்கு தனமாக அளித்த பெருமாள் ஸ்ரீரங்கநாதன். "தோலாத தனி வீரன் தொழுத கோவில்" – ராமன் ரங்கநாதனை ஆராதித்து இருக்கிறான்.பெருமாளாம் ராமன் ஆராதித்த ஸ்ரீரங்கநாதன் பெரிய பெருமாள் என போற்றப்பெற்றார்.ராமன் பின்னர், விபீஷணனிடம் குலா தனமாக அளிக்க, விபீஷணன் இலங்கை செல்லும் வழியில் காவேரியின் மணல் திட்டில் நித்ய வாசம் செய்ய ஆரம்பித்தவன் ஸ்ரீரங்கநாதர். "அம்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோவில்" என்று ஸ்வாமிதேசிகன் ஸ்ரீரங்கத்தை பற்றி அருளியுள்ளார். ஆகையால் ஸ்ரீரங்கநாதன் என்னும் ராமானுஜனின் தயைக்கு பாத்திரமான ஸ்வாமி தேசிகன். ரங்கநாதனின் தயையினால் வேதாந்தாசார்யன் / வேதாந்த தேசிகன் என்ற பிருதம் பெற்றதாக ஸ்வாமி தேசிகனே சாதித்துள்ளார். உபய வேதாந்தங்களுக்கும் ஆசார்யனாக ஸ்வாமி தேசிகன் திகழ்ந்தார்.ஸ்ரீரங்கநாதன் என்னும் ராமானுஜனின் தயைக்கு பாத்திரரானார் ஸ்வாமி தேசிகன்.

## திருமலையப்பனின் தயைக்கு பாத்திரமானதேசிகன்:

ஸ்ரீநிவாசன் வாஸம் செய்யும் திருவேங்கட மாமலை அடுத்த திவ்ய தேசமாகும். அந்த ஸ்ரீனிவாசனே தேசிகனாக பிறந்தார். ஸ்ரீனிவாசனின் அனுகிரஹமே தேசிகனின் பிறப்பிற்கு காரணம்.

**भाद्रपद-मास-गत-विष्णु-विमलर्क्षे**
**वेङ्कट-महीध्रपति-तीर्थदिन-भूते।**
**प्रादुरभवज्जगति दैत्यरिपु-घण्टा**
**हन्त ! कवितार्किक-मृगेन्द्र-गुरुमूर्त्या ॥**

மங்களத்தை வளர்க்கக்கூடிய புரட்டாசி மாதத்தில், விஷ்ணு நக்ஷத்திரத்தில் அதாவது ச்ரவண நக்ஷத்திரத்தில், ஸ்ரீனிவாசனின் தீர்த்தவாரி சுப தினத்தில் அனந்தசூரிக்கும், தோதாரம்பைக்கும்

*ஸ்வாமி தேசிகன் மகனாக அவதாரம் செய்தார். பெருமாளே ஆசார்யனாக பிறந்தான்.*

**अनन्तसूरि-सूनवेऽभिनन्द्यमान-वैभवात्**
**दिगन्त-वादि-हंस-जैत्र-कालमेघ-देशिकात्।**
**उपात्त-सर्व-शासनाय हन्त ! वर्ष विंशतौ**
**पुनः पुनर्नमस्क्रियास्तु वेङ्कटेशसूरये ॥**

*குழந்தை இல்லாத தம்பதியினர் அனந்தசூரி மற்றும் தோதாரம்பை, குழந்தை வேண்டி திருமலைக்கு யாத்திரையாக சென்றனர்.கனவில்திருமலையப்பனின் மணியினை தோதாரம்பை முழுங்குவதாக தம்பதியினர் ஸ்வப்னம் கண்டனர். மறுநாள் கோவிலில் மணியை காணாமல் ஒரே பரபரப்பாக இருந்தது. கோவில் ஜீயர் தோதாரம்பையை காட்டி, அவள் கர்ப்பத்தில் திருமணியின் அவதாரமாக பிள்ளை பிறக்கப் போவதை கூறினார். தேசிகன் அவ்வாறே திருமணியின் அவதாரமாக, தோதாரம்பையின் கர்ப்பத்தில், ராமனை போல் பன்னிரெண்டுமாதம் இருந்து அவதாரம் செய்தார். ஸ்வாமி தேசிகன் ஸங்கல்ப சூர்யோதயத்தில் தன்னை அனைவரும் திருமணியின் அவதாரமாக போற்றியதை தன் சொற்களினாலேயே அருளுகிறார்.*

*திருவாராதன சமயத்தில் தேவர்களை ஆவாஹனம் செய்யவும், அசுரர்களை விரட்டவும், திருமணி அடிக்கப்படுகிறது. ராமானுஜ ஸம்ப்ரதாயத்திற்கு விரோதமாக பொருள் சொல்லுபவர்கள் அலறி, பயந்து செல்லும் வகையில் திருமணியின் அவதாரமாகவே பிறந்து, அவர்களை வென்றார் நம் ஸ்வாமி தேசிகன். "திருமலை மால் திருமணியாய் சிறக்க வந்தோன்" நம்தேசிகன்.*

वेङ्कटेशावतारोऽयं तद्घण्टांशोऽथवा भवेत् ।

यतीन्द्रांशोऽथवेत्येवं वितर्व्यायास्तु मङ्गळम् ॥

*ஸாக்ஷாத் திருமலையப்பன் அவதாரமோ, இல்லை ஒரு வேளை திருமலையப்பனின் திருமணியின் அவதாரமோ, இல்லை ஒரு*

வேளை யதிராஜரின் அம்சமோஎன போற்றப்பட்டவர் நம் ஸ்வாமி தேசிகன். அப்படிப்பட்ட ஆச்சர்யமான அவதாரம் நம் ஆசார்யன் அவதாரம்.

பிள்ளை அந்தாதியில்,

**அன்றிவ் வுலகினை யாக்கி யரும்பொரு ணூல்விரித்து**
**நின்றுதன் னீள்புகழ் வேங்கட மாமலை மேவியும்பின்**
**வென்றிப் புகழ்த்திரு வேங்கட னாத னெனுங்குருவாய் நின்று**
**னிகழ்ந்துமண் மேனின்ற னோய்க டவிர்த்தனனே.**

உலகினை ச்ருஷ்டி செய்து, வேதங்களையும் கொடுத்து எம்பெருமான் ஏழு மலையின் மேல் சென்று அமர்ந்து கொண்டான். ஏன் என்றால், விவசாயி தான் பயிரிட்ட பூமியை ரக்ஷிக்க வயலுக்கு நடுவில் ஒரு பரணை கட்டி அமர்ந்து கொண்டு காப்பான். அது போல் ஸ்ரீநிவாசன் உலகத்தில் சரணாகதி என்னும் பயிரை நட்டு, அதன் விளைச்சலுக்கு உயர்ந்த திருமலையில் அமர்ந்து கொண்டு, கண்ணும் கருத்துமாக ரக்ஷித்து வருகிறான். ஒரு வேளை ஆடு மாடுகள் கூட்டமாக பயிரை மேய வந்தால், அருகில் உள்ள தன் பசங்களை உடனேயே அவைகளைவிரட்ட சொல்வது போல், ஆசார்யர்களை அவதாரம் செய்விக்கிறான் பகவான். வேங்கடநாதன் என்னும் குருவாக அவதரித்தான் ஸ்ரீநிவாசன்.

திருமலையப்பன் என்னும் ராமானுஜனே வேங்கடநாதன் என்னும் குருவாய் அவதரித்தான்.

யசோதை வகுளமாளிகையாக பிறந்தாள்,

கண்ணன் திருவேங்கடமுடையானாக பிறந்தான்.

பலராமனின் அனுஜனான கண்ணனே அதாவது ராமானுஜனே, திருவேங்கடமுடையான்.

அந்த திருவேங்கடமுடையானின் கருணையை தயா சதகம் என்னும் நூறுச்லோகங்களினாலே பாடியதால் திருவேங்கடமுடையானின் தயைக்கு பாத்திரமானார் நம் தேசிகன்.இப்படி ஸ்ரீநிவாஸனின் பரிபூரண கருணைக்கு இலக்கானவர் தேசிகன்.

**திருக்கச்சி வரதனின் தயைக்கு பாத்திரமானதேசிகன்**

காஞ்சி தேவப்பெருமாள் திருவடியில் பிறந்தவர் தேசிகன். வரதனுக்கு ராமானுஜன் என்னும் பெயர் உண்டு. இது ஒரு

ஸ்வாரஸ்யம். அனுஜ சப்தத்திற்கு "அனுகாரம்" பண்ணுதல் என்று அர்த்தம். ஒருத்தர் செய்வதை போலச் செய்கை செய்வது அனுகாரம் எனப்படும். அப்புள்ளார் தேசிகனின் ஆசார்யன், அவரின் மாதுலர் தாய் மாமா ஆவார். "யதிவரனார் மடப் பள்ளியில் வந்த மனம் எங்கள் வார்த்தையில் மன்னியதே" என்று கூறுவது மரபு. நம் தேசிக ஸம்ப்ரதாயம் மாதுலர் வழி வந்த ஸம்ப்ரதாயமாகும்.

காள மேக தேசிகாத் – வாதி ஹம்ஸ அம்புஜ ஆசார்ய என அழைக்கப்படும் அப்புள்ளாரிடம் அனைத்தையும் கற்றார் நம் தேசிகன். தேசிகன் "அப்புள்ளார் ஒரு கிளியை பழக்கினாப் போலே அடியேனை பழக்கி வைத்தார்" என்கிறார்.

அப்புள்ளார், வால்மீகி இராமாயணத்தில் ப்ரணவம் நடந்து சென்றதை இந்த ச்லோகம்மூலம் விளக்கினார்.

**अग्रतः प्रययौ रामस्सीता मध्ये सुमध्यमा।**
**पृष्ठतस्तु धनुष्पाणिर्लक्ष्मणोऽनुजगाम ह।।3.11.1।।**

பெருமாள் என்பவன் mobile கற்பக வ்ருக்ஷம். நாம் இருக்கும் இடம் தேடி வந்து அருள் புரிபவன்.

அகார வாச்யனான ராமன், உகார வாச்யகமாக பிராட்டியும், மகாரமாக லக்ஷ்மணனும் நடந்து செல்வதை ப்ரணவத்தின் விளக்கம் தரும் வகையில் தேசிகனுக்கு விளக்கினார் அப்புள்ளார்.மகாரம் 25வது தத்துவமான ஜீவனை குறிக்கும்.ராமன், ஸீதை மற்றும் லக்ஷ்மணன் மூவரும் ப்ரணவத்தின் வடிவை விளக்கும் வகையில் நடந்து சென்றனர்.இவ்வாறுப்ரணவத்தின்அர்த்தவிசேஷத்தைஅப்புள் ளார் தேசிகனுக்கு விளக்கினார்.

ராமானுஜர் விந்திய மலையில் வழி தெரியாமல் தவித்த பொழுது, வரதனும் பெருந்தேவியும் வேடுவன் வேடுவச்சியாக வந்து காப்பாற்றி காஞ்சி வரை அழைத்து வந்தனர். அடியேனின், மேகத்தின் தாகம் என்னும் நூலில் இந்த அனுபவத்தை விரிவாக படிக்கலாம். அப்பொழுது அந்த இரவில் வேடுவன் வரதன் வில்லோடு, அவனை தொடர்ந்து வேடுவச்சி பெருந்தேவி, பின்னர் ராமானுஜர் மூவரும் நடந்து சென்றனர். அன்று ராமன், சீதை, லக்ஷ்மணன் ப்ரணவத்தின் வடிவாக நடந்து சென்றதை போல் இவர்கள் நடந்து சென்றனர். அன்று ராமன் கொடுத்தது

அனுபவம் இன்று வரதன் காட்டியது அனுஷ்டானம்.ஸ்வாமி தேசிகன் யதிராஜா சப்ததியில்,சாலைக் கிணறு வ்ருத்தாந்தத்தை பற்றி கூறும் பொழுது,

**वन्दे तं यमिनां धुरन्धरमहं मानान्धकारद्रुहा पन्थानं परिपन्थिनां निजदृशा रुन्धानमिन्धानया ।**
**दत्तं येन दयासुधाम्बुनिधिना पीत्वा विशुद्धं पयः काले नः करिशैलकृष्णजलदः काङ्क्षाधिकं वर्षति ॥**

இன்றும் தேவப்பெருமாளுக்கு முதல் தீர்த்தம் சாலைக்கிணற்றிலிருந்து தான் எடுத்து வரப்படுகிறது.வரதன் என்னும் காள மேகம், நாம் கேட்பதை காட்டிலும் அதிகமாக வருஷிக்க என்ன காரணம்? மேகமானது ஒரு முறை மழை பொழிந்து விட்டால் காலியாகி விடும். அந்த மேகத்தில் மழைக்கு பின்னர் நீர் இருக்காது. வரதன் முக்தி மழை பொழியும் முகில் வண்ணனாக இருக்க காரணம் என்னவென்றால், தினமும் சாலைக்கிணற்றிலிருந்து ஸமர்ப்பிக்கப்படும் தீர்த்தத்தை பருகிக் கொண்டு இருப்பதினால்.

விபவத்தில் அனுபவத்தையும், வரதனாக அர்ச்சையில் அனுஷ்டானத்தையும் பெருமாள் காட்டுகிறான்.

முதலில் அநந்தனாக, பின்னர் லக்ஷ்மணனாக, அடுத்து பலராமனாக அவதாரம் செய்தவரே, கலியுகத்தில் ராமானுஜராக அவதாரம் செய்தார். இராமாயணத்தில் நடந்த வ்ருத்தாந்தத்தை, வரதன் அனுஷ்டித்து (அனுகாரம் ) செய்து காட்டியதால், வரதன் ராமானுஜன். வரதனாம் ராமானுஜனின்கருணைக்கு இலக்கானவர் தேசிகன்.

பத்தி முதலாமவற்றுள் பதி எனக்கு கூடாமல்
எத்திசையும் ஓழன்றோடி இளைத்துவிழும் காகம்போல்
முத்தி தரும் னகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில்
அத்திகிரி அருளாளர்க்கு அடைக்கலம் னான் புகுந்தேனே

என கச்சி வரதனின் திருவடியில் சரணாகதி செய்தவர் நம் தேசிகன். “வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக என்று மடகிளியை கை கூப்பி வணங்கினாள்” – பரகால நாயகியான திருமங்கைஆழ்வார் கிளிக்கு பேச சொல்லிக் கொடுக்கிறாள். தான் பழக்கிய கிளி அழகாக பாட ஆரம்பித்தவுடன், சந்தோஷமடைந்த பரகால நாயகி, அந்த மடப்பம் பொருந்திய

*கிளியை பார்த்து கை கூப்பினாள். வரதன் வளர்த்த கிளி தேசிகன்.*

***"திக்கு எட்டும் புகழ் ஸ்ரீபாஷ்யத்தை தெளிய உரைத்திடு நாள்"*** – *தேசிகன் திக் எட்டும் ஸ்ரீபாஷ்யத்தை உரைத்திடச் செய்தார்.அந்த தேசிகனை பார்த்தவுடன், தான் வளர்த்த கிளி என்று பெருமை கொள்கிறான் வரதன்.*

*தேசிகனின் திருநட்சத்திரம் புரட்டாசி சரவணத்தன்று, தன் குடை, சாமரம், வாத்தியங்கள், பல்லாக்கு, அனந்த கொத்து கைங்கர்யபரர்கள் என அனைத்தையும் தேசிகனுக்கு அனுப்பி தன் குழந்தை "வரதா வரதா" என்று வரதன் ஆவலுடன் காத்துக் கொண்டு இருக்கிறான்.*

*ஸகல பரிவாரங்களுடன் தன் குழந்தை தேசிகன் வருவதை பார்த்து வரதன் சந்தோஷப்படுகிறான். அன்று பெரியாழ்வர் பவனி வருவதைக் காண பெருமாள் வந்தான், இன்று தேசிகனைக் காண, அனுபவிக்க வரதன் வருகிறான்.*

*தேசிகன் பிறந்தது வரதன் திருவடியில், பின்னர் ஸித்தாந்த ஸ்தாபனம் செய்தது அரங்கன் திருவடியில்.*

*இதனாலேயே நான்கு திவ்ய தேசங்களில் கைங்கர்யம் இனிதே நடைபெற வேண்டும் என்று வரதனையே தேசிகன் ப்ரார்த்திக்கிறார். வரதனின் பரிபூரண கடாக்ஷத்திற்கு பாத்திரபூதர் ஸ்வாமி தேசிகன்.*

***திருயாதவகிரி சம்பத்குமாரனின் தயைக்கு பாத்திரமானதேசிகன்***

*சம்பத்குமாரன் ( செல்லப்பிள்ளை) யதிராஜரின் இளவல். ராஜா ராமானுஜர், சம்பத்குமாரன் இளையராஜா ஆவார். இந்த பெருமாளுக்கு ராமப்ரியன் என்று திருநாமம். இஷ்வாகு குலா தனமான ஸ்ரீரங்கநாதனை, விபீஷணன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றவுடன், ராமன் தான் ஆராதனம் செய்ய மீண்டும் ஒரு பெருமாளை எழுந்தருளப்பண்ணினார். ராமனால் ஆராதிக்கப்பட்டு, ராமனுக்கு மிகவும் பிரியமான பெருமாள் என்பதால் ராமப்ரியன் என்று திருநாமம்.ராமனுக்கு அடுத்து வந்தவன் ராமப்ரியன், ராமனுக்கு அனுஜன் ஆகையால் ராமப்ரியன் ராமானுஜன்.பின்னர் கிருஷ்ணனால் யாதவகிரியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட பெருமாள் இவரே.*

*ராமனின் பேத்தி கனகமாலினி (கனகாங்கி) என்று பெயர். யது வம்சத்து யதுத்தமனுக்கு கல்யாணம் செய்து கொடுத்தான் குசன். குசன் பெண் விட்டு சீதனமாக ராமப்ரியனை ஆராதனம் செய்ய*

அளித்தான். இப்படி யது வம்சத்தில் ஆராதிக்க பட்ட பெருமாளை, பலராமன் தீர்த்தயாத்திரை சென்ற போது, யாதவ கிரியில் மூலவர் திருநாராயணன் திருஉருவமும் ராமப்ரியன் திருஉருவமும் ஒன்றாக இருப்பதைக் கண்டு, கண்ணன் அனுமதியுடன் ராமப்ரியனை திருநாராயணபுரத்தில் ப்ரதிஷ்டை செய்தார்கள்.ராமனுக்கு பிறகு அவதாரம் செய்ததினால் ராமப்ரியன் ராமானுஜன். யதிராஜனான ராமானுஜர் ராமன் என்றால், யுவராஜாவான சம்பத்குமாரன் ராமானுஜன். ராமப்ரியனின் க்ருப்பைக்கு பாத்திர பூதர் தேசிகன். இந்த ராமானுஜ தயா பாத்ரம் தனியன் அவதாரம் மேல்கோட்டையில் , சம்பத் குமாரன் ஸந்நிதியில் தான் ஏற்பட்டது. ராமப்ரியனாம் சம்பத்குமாரின் தயைக்கு பாத்திரமானவர் தேசிகன். இவ்வாறு திருவரங்கம், திருமலை,திருக்கச்சி, திருயாதவகிரி ஆகிய நான்கு பிரதானமான திவ்ய தேசங்களின் எம்பெருமான்களின் கருணைக்கு ஸ்வாமி தேசிகன் பாத்திரபூதர் ஆவார். இதை மேலும்நன்கு விவரித்து அனுபவித்தால் தேவநாதனின் பூரண கருணைக்கு முழு வடிவம் நம் ஸ்வாமி என்பதும் நன்கு புரியும்.

*ராமானுஜ தயா*

இவர்கள் மட்டுமின்றி தசாவதார எம்பெருமான், ஸ்ரீ தேவி, பூ தேவி , மற்றும் நீளா தேவி, விச்வக்சேனர்,லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன்,நம்மாழ்வார், ஆளவந்தார் மற்றும் பூர்வாசார்யர்கள், ராமானுஜர், நடாதூர் அம்மாள், அப்புள்ளார் (ராமானுஜப் பிள்ளான், கிடாம்பி ராமானுஜாசார்யர்) ஆகியோர் தயைக்கும் தேசிகன் பாத்திரமானவர்.

தேசிகனின் திருவடிகளை சரணம் என்றும் பற்றி, அனைத்து ஆழ்வார், ஆசார்யர்கள், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன், ஸ்ரீ தேவி, பூ தேவி, மற்றும் நீளா தேவி, எம்பெருமான் ஆகியோரின் கருணையை நாமும் பெற்றிடலாம். ஸ்வாமி தேசிகனின் 750வது திருநக்ஷத்திர மஹோத்சவத்தில், திருவஹீந்திரபுரம் ஸ்ரீ வேத பரிபாலன சபா வெளியிடும் மலரில், அடியேனுக்கு லேகன கைங்கர்யம் கிடைத்தது தேசிகனின் அனுகிரஹமே. இந்த வாய்ப்பை அளித்த மகான்களுக்கு, அடியேனின் தன்யவாதங்கள் ஸமர்ப்பணம் செய்கிறேன்.

தேசிகன் அல்லால் தெய்வம் இல்லை. தேசிகன் திருவடிகளே சரணம்

# ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை

**(ஸ்ரீரங்கம் (8) - ரக்ஷாக்ரந்தம்-3)**



***இது ஸித்தாந்த ஸ்தாபனம், நித்யாநுஷ்டான ஸ்தாபனம், நித்ய வ்யாக்யானம் என்னும் மூன்று அதிகாரங்கள் அடங்கியது.***

**1)** *முதல் அதிகாரத்தில் -* ***ஸ்ரீ பாஞ்சராத்ர ஸாஸ்த்ரத்தில் பிரிக்கப்பட்டிருக்கும் நான்கு விதமான ஸித்தாந்தங்களின் ப்ரகாரத்தையும், அவைகள் ஒன்றோடொன்று கலக்கக் கூடாதென்றும், அப்படி நேர்ந்தால் ப்ராயஸ்சித்தாதிகள் செய்ய வேண்டும் என்றும்,***

**2)** *இரண்டாவது அதிகாரத்திலே பாஞ்சராத்ர யாஸ்த்ரத்தில்* ***சொல்லப்பட்டதாய் நித்யத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டதான பகவதாராதன க்ரமமே பரமைகாந்திகளால் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றும்***

**3)** *மூன்றாம் அதிகாரத்தில் -* ***நித்ய க்ரந்தத்திற்கு வ்யாக்யானமும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.***

***இரண்டாவது அத்யாயத்திலே "ப்ரபத்த்யாவ்ருத்திப்ரஸங்காதி சோத்யாநி து நிக்ஷேப ரக்ஷாயாம் பரிஹ்ருதாநி" (ப்ரபத்தியை ஆவ்ருத்தி செய்ய வேண்டிவரும் என்றிவை முதலான ஸந்தேஹங்கள் ஸ்ரீநிக்ஷேபரக்ஷையிலே பரிஹரிக்கப்பட்டிருக்கின்றன.) என்று நிரூ பிக்கப்பட்டிருப்பதால் அதற்குப் பிறகே இது அருளிச்செய்யப்பட்டது என்று நிர்ணயித்துள்ளனர்.***

***(ஸ்ரீதேஸிகள் வைபவம்---ஸ்ரீவேத பரிபாலன ஸபா, திருவஹீந்த்ரபுரம்)***

# ஸ்ரீதேவநாதன் ஸ்ரீதேஸிகனை வழி மறித்து பெருமை பெறுதல்

இப்படி ஸ்ரீஹயக்ரீவரூபியான ஸ்ரீதேவநாதனுடைய கடாக்ஷ விரேஷத்தால் அனைத்து வித்யைகளிலும் கரை கண்டவராய் விளங்கின ஸ்ரீதேஸிகன், வெகுகாலம் திருவஹீந்த்ரபுரத்திலே வஸித்தருளினார். பிறகு ஒரு நாள் பகவத் பாகவத ஆசார்யாதி நியமனங்களில் ஏதாவதொன்றை முன்னிட்டே க்ரந்த நிர்மாணம், ஸம்ப்ரதாய ப்ரவசனம் முதலியவற்றை மேற்கொள்ள வேண்டு மென்பதை உலகத்தவருக்கு ஸ்ரிக்ஷித்தருள வேண்டி, தாமும் அவ்வாறே அபினயித்தருளத் திருவுள்ளம் பற்றினார். அதற்காக தம்முடைய ஜன்ம பூமியாகிய காஞ்சீபுரம் செல்வதற்காக திருவஹீந்த்ரபுரத்திலிருந்து புறப்பட்டு, அருகாமையிலுள்ள துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணையாற்றங்கரையில் ஓரிரவு தங்கியருளினார்.

ஆழ்வாரால் பெருமை பெற எண்ணியிருந்த திருப்பேர் எம்பெருமான் ஆழ்வார் "திருமாலிருஞ்சோலை" என்று ஆரம்பித்த உடனே, அவர் நெஞ்சு நிறையப் புகுந்து, தம் விஷயமாய்ப் பாடும்படி நிர்பந்தித்தான்.அதுபோல்

"வைகுந்தனாகப் புகழ "  (திருவாய்மொழி 7.9.7)
பல என்கிறபடியே இவருடைய (ஸ்ரீதேஸிகனுடைய) மங்களாஸாஸநத்தால் தாம் விரேஷமான அதியைத்தைப் பெற வேண்டுமென்று இந்த க்ஷேத்ரத்தில் முன்னிவந்துறைந்திருந்த ஸ்ரீதேவநாதன் இவருடைய ஸ்வப்நத்தில் தோன்றி, "உமக்கு இவ்வளவு விரோஷ கடாக்ஷம் செய்தது எதற்காக? நீர் நம் விஷயமாக வேதாந்தார்த்த ப்ரதிபாதகங்களான ஸ்தோத்ராதிகளைச் செய்ய வேண்டாவோ? இந்த நம் ஸ்ரீவிஸிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைப் விதங்களிலும் பரவச் செய்ய வேண்டாமா?" என்று கேட்டருளினான். ஸ்ரீதேஸிகனும் க்ரந்த நிர்மாண ஸம்ப்ரதாய ப்ரவசனாதிகளுக்கு பகவத் பாகவதாதி நியமனங்களில் ஏதாவதொன்றை எதிர் பார்த்திருந்தமையால், இப்பொழுது அது கிடைத்ததும் உடனே திரும்பி திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளினார்.
இவ்வ்ருத்தாந்த விபோஷத்தை ஸ்ரீதேஸிகன் தாமே
"ஆக்ருஷ்டவாநிதி வாநநுகம்பமாந" (தேவநாயக பஞ்சாசத் 8)-
(என்னிடத்தில் க்ருபை செய்து நீர் என்னை எப்படி இழுத்தீர்) என்று அருளிச் செய்திருக்கிறார்.

# ஸ்ரீதேஸிகனிடத்தில் ப்ரபத்தி

கேள்வி ::: பதில்

**கேள்வி** :: ஸ்ரீதேசிகன் ஸர்வேஸ்வரனே என்றால் ஸ்ரீதேசிகனிடத்திலேயே ப்ரபத்தியை அனுஷ்டிக்கலாமே! அவ்வாறு பூர்வாசார்யர்கள் அனுஷ்டித்துள்ளனரா ?

**பதில்** : ஆம்! இவ்விஷயத்தில், முன் காலத்தில் நடந்த வ்ருத்தாந்தத்தைக் கூறுகிறோம்.
திருவஹீந்த்ரபுரத்தில் பெரிய ஸ்வாமி எனும் கேதாண்டிபட்டி ஸ்வாமி ஸந்நிதியில் ஒருவர் உபாயானுஷ்டானத்திற்குப் பிரார்த்தித்தார். ஸ்வாமி ஆகட்டும் பார்க்கலாம் என்று அருளினார். இவ்வாறு மேலும் ஓரிருமுறை ப்ரார்த்திக்க, ஸ்வாமியும் ஆகட்டும் என்றே ஸாதித்தார் இந்நிலையில் ஸ்ரீதேஸிகனுடைய ப்ரஹ்மோத்ஸவம் ப்ராப்தமாயிற்று. அன்று ஆறாம் திருநாள். யானை வாகனத்திலே ஸ்ரீதேஸிகன் புறப்பாட்டிற்கு ஸித்தமாக எழுந்தருளியிருக்கிறார். அப்பொழுது தீவட்டி ஸமர்ப்பிக்கவேண்டிய சிப்பந்தி ஏதோ காரணத்தினால் வரமாட்டேன் என்று நின்றுவிட்டான். அந்தத் துணியைத் தொட்டு தீவட்டி ஸமர்ப்பிக்க யாரும் முன் வராததால் புறப்பாடு தடைபட்டது. அப்போது உபாயானுஷ்டானத்தை ப்ரார்த்தித்த ஸ்வாமி தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு தீவட்டி ஸமர்ப்பிக்க, புறப்பாடு நடைபெற்றது. இதைக் கடாக்ஷித்த ஸ்வாமி, "இப்படிப்பட்ட வ்யக்திக்கு அவய்யம் ப்ரபத்தியைச் செய்து வைப்போம்" என்று திருவுள்ளம் பற்றி மறுநாள் ப்ராதஹ் காலத்திலே வருமாறு அவரை நியமித்தார். அவ்வாறே மறுநாள் அவரை அழைத்துக்கொண்டு ஸ்ரீதேவநாதன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, "இப்போது உமக்கு பரந்யாஸத்தை அனுஷ்டிக்கிறேன்" என்று ஸாதித்தார். அதற்கு அவர் ஸ்ரீதேஸிகன் ஸந்நிதியிலேயே அடியேனுக்கு பரந்யாஸத்தைச் செய்தருளவேணும் என்று விண்ணப்பித்தார். இதனைக் கேட்ட பெரிய ஸ்வாமி, ஸ்ரீதேஸிகாவதார ரஹஸ்யஜ்ஞரான இவருக்கு ப்ரபத்தியைச் செய்துவிக்க இத்தனை காலம் விளம்பித்தோமே என்று வருந்தி "ஸ்ரீதேஸிகன் சாற்றுமுறை அன்று உமக்கு ப்ரபத்தியை அனுஷ்டிப்போம்" என்று அருளி அவருக்கு விடைகொடுத்தார். உத்தமமான புரட்டாசித் திருவோணம் அடியவர்க்கு மெய்யன் திவ்யதம்பதிகள், ஸ்ரீதேஸிகனோடு எழுந்தருளியிருக்கும் ஸன்னிவேஸத்திலே சாற்றுமுறை பூர்த்தியானது. அந்த ஸமயத்திலே ஸ்ரீ பெரிய ஸ்வாமி இவரை அழைத்துச் சென்று பரந்யாஸத்தை அனுஷ்டிக்க

*- அப்போது இந்த ஸ்வாமி "அடியேனை இப்படி ஏன் வஞ்சிப்பது? ஸ்ரீ பெருமாளும் தாயாரும் எழுந்தருளியபின் ஸ்ரீதேசிகன் திருவடியிலேயே பரஸமர்ப்பணம் செய்தருளவேண்டும்" என்று விண்ணப்பித்தார். இதனைக்கேட்டுப் போர உகந்து பெரிய ஸ்வாமி அருளியதாவது "உமக்கு ஸ்ரீதேஸிகனிடத்திலேயே பரந்யாஸத்தை அனுஷ்டிக்கிறேன். ஆயினும் லோக ஸங்க்ரஹார்த்தம் இப்போதே அனுஷ்டிக்கிறேன் என்று ஸாதித்து அவ்வாறே அனுஷ்டித்துப் போந்தார்.*

*ஆகையால் ஸ்ரீதேஸிகன் ஸர்வேஸ்வரனே என்பது பூர்வாசார்யர்களின் உபதேஸ அனுஷ்டானங்களிலே ஸுப்ரஸித்தம்.*

*(ஸ்ரீதேஸிகன் வைபவம் --ஸ்ரீவேத பரிபாலன ஸபா, திருவஹீந்த்ரபுரம்)*





# ஸ்ரீதேஸிகன் கருடமந்த்ரத்தை ஜபிக்க

முன்பொரு சமயம் (அம்ருதாஹரண காலத்தில்)
தவோபரிஷ்டாத் ஸ்தாஸ்யாமி) என்று தான் வரித்ததை

ததேதிசஹஸந்ப்ராஹஹரி:நாராயண:ப்ரபு: /
த்வஜம்சமேபவஸதாத்வமேவவிஹகேஸ்வர /
உபரிஷ்டாத்ஸ்திதி: தேஸ்துமமபந்த்ரஸர்வதா

(ஸாந்திபர்வ - 211ம்அத்யாயம்)

என்று எம்பெருமான் அருள, தான் வஞ்சிக்கப்பட்டதை நினைத்துக் கொண்டேயிருந்த ஸ்ரீவைநதேயன், இத்தேஸிகாவதார காலத்திலே தம்முடைய மனோரதத்தை நிறைவேற்றிக் கொள்ள ஸமயத்தைப் ப்ரதீக்ஷித்துக் கொண்டிருந்தார். ஆதலால் ஸ்ரீதேஸிகன் கருடமந்த்ரத்தை ஜபிக்க உபக்ரமித்த அளவிலேயே,

1.முன் ஸ்ரீராமாவதாரத்தில் நாக பாண விமோசனார்த்தம் சக்ரவர்த்தித் திருமகன் நினைத்த பொழுது எழுந்தருளினாப் போலே இப்போதும் ஸ்ரீவைநதேயன் உடனே நேரில் எழுந்தருளினார்.

2.மதுகைடபர்களால் வேதாத்மாவான தனக்கு அபஹாரம் நேர்ந்த போது தன்னை மீட்டுக் கொடுத்த ஸ்ரீஹயக்ரீவன் விஷயத்திலே க்ருதஜ்ஞதை தோற்ற யோகாசிகையிலே ஓர் ஹயக்ரீவமூர்த்தியை ஸ்ரீதேசிகன் திருக்கைகளி ஏறியருளப் பண்ணினார்.

3. பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாய் அருள பரமனாகிய ஸ்ரீஹயக்ரீவனுடைய மந்த்ரத்தையும் உபதேசித்து தான் ஆசார்யபதத்தைப் பெற்று தனது திருவுள்ளக் கிடக்கையை நிறைவேற்ற கொண்டார்.

4.மேலும் இந்த ஸம்ப்ரதாயம் இவர் மூலமாகத் தழைக்க போகிறது என்பதை அறிந்து, இவர் மூலமாகத் தாமும் பெருமை பெற எண்ணித் தம் விஷயமாய் ஒரு ஸ்தோத்ரம் செய்ய வேணுமென்று கோரி அந்தர்தானம் அடைந்தார்.

*(ஸ்ரீதேஸிகன் வைபவம்--- ஸ்ரீவேத பரிபாலன ஸபா, திருவஹீந்த்ரபுரம்)*

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவராஹ மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி தேசிகன் தமிழ் பிரபந்தம் திருச்சின்ன மாலை - புதிர்

புதிர் முயற்சி: க்ருஷ்ணகுமார தாத தாஸன், புண்ணியபுரி(பூனா)

காஞ்சி வரதனின் ஸந்நிதியில் பெருமாளை எழுந்தருளப் பண்ணுகையில் இசைக்கும் திருச்சின்னவொலி வைத்து பாடல்களை ஸ்வாமி தேசிகன் தந்தருளி உள்ளார். இப்பாசுரங்களில், பிரயோகிக்கின்ற சொற்களை, கீழேயுள்ள குறிப்பு கொண்டு விடைகளை காண்போம் வாருங்கள்!.

1. மேகநிறத்தன் என்பதற்கு ஈடான வார்த்தை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | ன் |

2. அருச்சுனன் என்ற பொருள்படும் பதமிங்கே

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ன் |

3. ஒற்றுமை இல்லாக் குணம்

| | | | |
|---|---|---|---|
| | | | மை |

4. பாண்டவர்கள் திருமதி

| | | | |
|---|---|---|---|
| பா | | | |

5. பிரம்மாவிற்கு பெருமாள் காட்சியளித்த புனித இடம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ | | | | | |

6. பிராட்டி, பெருமாளை விட்டுப் பிரியாதபடி எனக்குறிக்க உதவும் பதம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | லா |

7. கமலவாசினி என்பதால் தாயாரை இப்படி தேசிகன் அழைக்கிறார்

| | | | | |
|---|---|---|---|---|
| தா | | | | |

8. பெருமாள் நமக்கு தந்தருளும் வானாடு, வைகுந்தம், பரமபதம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | பு |

9. வேழமலையை இப்படியும் சொல்லலாம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ரி |

10. கம்சனை அழிக்க கண்ணன் கொண்ட மிக்க கோபக் குணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | | | | | |

சுபமஸ்து

# விடைகள்:

| | | |
|---|---|---|
| 1. முகில்வண்ணன் | 5. உத்தரவேதி | 8. தெளிவிசும்பு |
| 2. பார்த்தன் | 6. அகலகிலா | 9. அத்திகிரி |
| 3. வேற்றுமை | 7. தாமரையாள் | 10. கடுஞ்சினம் |
| 4. பாஞ்சாலி | | |



# ஸ்ரீராமாவதாரமும் ஸ்ரீதேசிகாவதாரமும்






| ஸ்ரீராமாவதாரத்தில் | ஸ்ரீதேசிகாவதாரத்தில் |
| --- | --- |
| தசரதருடைய | அனந்தஸூரி தோதாரம்பா தம்பதிகளின் |
| புத்ரகாமேஷ்டி யாகத்தில் | ஸ்வப்னத்தில் (கனவில்) |
| எம்பெருமானே ப்ரஜாபதி தேவனாய் வந்து | திருவேங்கடமுடையானே பாலகனாய் வந்து |
| திவ்ய பாயஸத்தைக் கொடுத்து பருகக் சொன்னார் | திவ்ய கண்டையைக் கொடுத்து விழுங்கச் சொன்னார் |
| இதனை வ்யாஜமாகக் கொண்டு | |
| பன்னிரெண்டு மாதங்கள் கழித்து | பன்னிரெண்டு வருடங்கள் கழித்து |
| எம்பெருமானே | |
| ஸ்ரீராமனாக | ஸ்ரீதேசிகனாக |
| அவதரித்தான் | |

# ஸ்வாமி தேஸிகன் --அவதாரவைலக்ஷண்யங்கள்

திரு அவதார க்ஷணம் தொடங்கி “ஆப்ராதுர்பாவம் ப்ரகடித பரப்ரஹ்மபாவ:” என்னப்பட்ட ஶ்ரீக்ருஷ்ணனைப் போல ஶ்ரீதேஸிகனும் தம்முடைய அவதார விசேஷத்தின் பெருமையை அதிபால்யம் தொடங்கி பல படிகளாலும் வெளியிட்டருளினார்.
இவர் படிகளை ஆராய்ந்த பெரியோர்கள் இவர்

1.ஶ்ரீக்ருஷ்ணனைப் போன்றவர் என்றும்

2. வர ப்ரஸாதத்தால் அடையப்பட்ட தேவதா பாரமார்த்ய ஜ்ஞானமுடைய பராஸர மஹர்ஷி போன்றவர் என்றும்

3.வால்மீகி மஹர்ஷிக்கு ஜ்ஞான ப்ரதானம் செய்த ப்ரஹ்மாவிற்கும் வேதத்தை உபதேயித்தருளின் ஶ்ரீஹயக்ரீவனுடைய ப்ரஸாதத்தாலே ஸர்வஜ்ஞத்வம் பெற்றவர் என்றும்

4. விரக்தாக்ரேஸரரான ஶுக மஹர்ஷியைப் போன்றவர் என்றும்

5. வ்யாஸ மஹர்ஷியைப் போல ஸாரீரக யாஸ்த்ர விஷயமான நியாயத்தை வகுத்தவர் என்றும்

6. கலியனைப் போல அர்ச்சாவதாரத்தில் போர மண்டியிருப்பவர் என்றும்

7. ஸ்ரிய:பதியை அனுபவிக்கிற விஷயத்தில் "அகலகில்லேன் இறையும்" என்னும் பெரிய பிராட்டியாரைப் போன்றவர் என்றும்

8. பகவான் தானும் மேல் விழுந்து தம் விஷயமாகக் கவிபாட நியமிக்கும்படியான ஏற்றம் பெற்றவர் என்றும்

9. தொண்டர்க்கமுதுண்ணச் சொல் மாலைகள் சொன்ன ஆழ்வாரைப் போல பாகவதானுக்ரஹத்தையே தமக்குப் புருஷார்த்தமாக உடையவர் என்றும்

10. ஸர்வவித கைங்கர்யங்களையும் கூட இருந்து செய்த இளைய பெருமாளைப் திவ்ய தம்பதிகளின் விஸ்லேஷத்தைப் பொறுக்காமல் போல அவர்களுடைய ஸம்ய்லேஷமே நித்யஸுகம் என்பதை நிலை நிறுத்தினவர் என்றும்

11.போஷி உகந்த கைங்கர்யமே உத்தேஸ்யம் என்றிருந்த பரதாழ்வான் போன்றவர் என்றும்

12. பாகவத கைங்கர்யமே பரமோத்தேஸ்யம் என்றிருந்த சத்ருக்னாழ்வான் போன்றவர் என்றும்

13. பரம த்வேஷிகளுக்கும் ஹிதோபதேஸம் செய்ய முன் வந்த ப்ரஹ்லாதாழ்வான் போன்றவர் என்றும்

அனுஸந்தித்துப் போந்தனர்.

நன்றி:: ஶ்ரீவேத பரிபாலன ஸபா திருவஹீந்த்ரபுரம்.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவராஹ மஹாதேசிகாய நம:

# ஸ்வாமி தேசிகன் தமிழ்ப் பிரபந்தம்
# அதிகார ஸங்க்ரஹம் புதிர்

புதிராக்கம் முயற்சி: க்ருஷ்ணகுமார தாத தாஸன், புண்ணிய புரி (பூனா)

ஸ்வாமி தேசிகன் தாம் ஸாதித்தருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார விஷயங்களையே அடக்கி அதிகார ஸங்க்ரஹம் தலைப்பில் தமிழ்ப் ப்ரபந்தமாக்கியுள்ளார். இதில் வரும் பாசுரங்கள் பதங்கள் ஒட்டிய புதிர். விடை காணலாம் வாருங்கள்...எளிமையாக்க அடைப்புக்குள் குறிப்பது பாசுர எண் வரிசையாகும். இனி விடைகள் தேடலாமா?

1. தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல் (பாசுரம் 6)

| | | | |
|---|---|---|---|
| | | | |

2. மோக்ஷமருளும் திருமால் இவனே! (பாசுரம் 15)

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |

3. இவருரை சேர் சிந்தையினோம் சிந்தியோம் இனித் தீவினையே! (பாசுரம் 4)

| | | | | | | |
